முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 836

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.01.2022, புதன்கிழமை

1. அறம்வேலி கொண்ட அண்ணலே
ஆற்றலாக உலகில் மாற்றம் செய்யவேண்டி
வரம்பெற்று வந்த ஆறுமுக அரங்கனே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே ஞான அறிவுரை ஆசி தன்னை
இயம்பிடுவேன் பிலவ சிலை திங்கள் தன்னில்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 28ம் நாள், 12.01.2022 புதன்கிழமை)
துணிவுபட அரங்கன் தர்மமே
தேசமதை ஞானவழி நடத்தி இனிதே
3. இனிதே உலகோர்க்கு ஞானவழி காட்டி
எல்லா திக்கிலும் தர்மசக்தி கொண்ட ஞானவான்கள்
ஞானவான்கள் நிறைந்த ஆளுமையாக
ஞானிகள் ஆட்சிக்காலமாக மாற்றம்
4. மாற்றம் சடுதி அரங்கன் தயவாலே
மண்ணுலகம் கண்டு சிறக்கக்கூடும்
ஆற்றல்பட அரங்கன் வழி வகுத்துத்தருகின்ற
அன்னதான உயர்சேவை தன்னை
5. மாற்றம் கருதி உலகோர் எங்கிலும் கையில்கொண்டு
உயர்வாக தொடர்ந்து தொண்டாக செய்துவர
வருகவே தர்மபலம் பெருகபெருக
வையகம் வளமும் நல்ல பாதுகாப்பும் காண்கும்
6. காண்கவே தர்மவான் அரங்கன்
கட்டளையாக உலக மக்கள் ஏற்று
மேன்மைதரும் சன்மார்க்க வழிகளையும்
முழுமை பாதுகாப்புத் தரக்கூடிய தர்மவழிகளையும்
7. வழிகளையும் உலகோர் வழிமொழிந்து தொடர்ந்து பின்பற்றி வர
வையகமெங்கும் உயிர்கொலை நீக்கி
ஜீவதயவு என்கின்ற தர்மவான் அரங்கன் சைவநெறி நிலைத்து நிற்க
வதையாக உள்ள நடப்புக்கால பேரிடர்களும் விலகி
8. விலகி உலகம் பாதுகாப்பை பெறும்
விரைந்து ஞானவான்கள் தலைமை உருவாகும்
கலகமில்லா நல்ல பாதுகாப்பு மிக்க
கலியுகத்தையே ஞானயுகமாக மாற்றி

9. மாற்றி அருளும் காலமாக
மகான் அரங்கன் அருளாலே அற்புதம் நிகழக்கூடும்
ஆற்றல்பட வாரீர் அரங்கன் ஞானக்குடிலுக்கு
அரங்கன்பால் யான் இருந்து அற்புதம் நிகழ்த்துவதாலே

10. வரமென அரங்கன் கரம்பட்ட மக்களுக்கெல்லாம்
வாழும் காலமே ஞானசித்தி
பிறவா பெரும் பேறுசித்திக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–